ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1645/23 - 2010 මාර්තු 17 වැනි බදාදා - 2010.03.17
1645/23 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டம்*

**5 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளையை இரத்துச் செய்தல்**

*இலக்கம் 1626/8, 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 4 ஆம் திகதியிலுள்ள விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை திருத்தம் செய்தல்*

மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும், நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு தொடர்பான அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1626/8, 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 4 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் "இந்த கட்டளையின் ஊடாக" என்ற வாக்கியத்தை அகற்றுவதுடன் இவ்வறிவித்தல் கீழுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன்.

"மேல் மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவினால் எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு தொடர்பான அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியன்று மற்றும் 666/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கட்டளையிடப்பட்ட, 1990 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி மற்றும் 637/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட சுதந்திர வியாபார தொழில் அட்டவணைக்கு 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபார தொழில்களையும் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று செய்யப்பட்ட கட்டளையை 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் இங்கு இரத்து செய்கின்றேன்".

"தீர்வை வரியற்ற விற்பனை நிலையங்கள்"

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி,திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு,
காணி, கல்வி,உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்
வேலைவாய்ப்பு மற்றும்
பொருளாதார மேம்பாட்டு தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 07,
2010, மாச்சு 16.

4 - 75